தவிர, மக்களுடைய நன்மை என்ன என்று நாம் பொதுவாக சில நேரங்களிலே கவனிக்கத் தவறி விடுகிறோம். இவைகளை எல்லாம் பிரச்சினையாகக் கொண்டுவர நான் விரும்பவில்லை. ஏனென்றால் இது பெரிய சர்ச்சைக்குரிய விஷயம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் இப்போது உள்ள அரசோடு தொடர்பு கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசே கூறியதைப்போல பேச்சுவார்த்தை மூலமாக நீர் கிடைத்துவிடும் என்று நாம் இன்னும் நம்பிக் கொண்டு இருக்க வேண்டுமா என்பது கூட இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த பேச்சுவார்த்தைகளை நடத்த ஏற்பட்ட செலவுகளை கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதிலேயே 2, 3 அணைகளை கட்டி இருக்கலாம் போல் தெரிகிறது. எனவே நாம் கூடுமானவரை மத்திய அரசிடம் சொல்லி, எங்கெங்கு உபரி நீர் இருக்கிறதோ அதை எல்லாம் பற்றாக்குறை மாநிலங்களுக்குத் திருப்புவதற்கு அவர்கள் ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். தேசிய சொத்தை வீணாக்குவதற்கு எந்த மாநிலத்திற்கும் அதிகாரம் கிடையாது. நதி நீர் என்பது பொதுச் சொத்து. அதை வீணாக்குவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது என்று சொல்லி மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம்.

1975-76 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களிலுள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்யும் திட்டம்.

* **வினா எண் 377.—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்** துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1975-76 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்ய திட்ட பணி மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணகிரி, சாத்தனூர் ஆகிய நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்வதற்கு திட்டப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை விவசாயிகளுக்கு ஏலம் விடும் முறை பயன்படுத்தப்படுகிறதா ? இல்லை என்றால் வருங்காலத்தில் இதுபோன்று பல ஆண்டுகளாக படிகின்ற வண்டல் படிவுகளை விவசாயிகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, பொதுவாக ஆய்வு செய்யப்பட்டதில் 19 ஆண்டு காலம் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் ஏற்படக் கூடிய படிவின் அளவு என்ன என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டோம். அதிலே கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 1.24 சதம் மண் மேடிட்டுக் கொண்டே வருகிறது. அவைகளை நாமே வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஆகக் கூடிய செலவை விட, ஒரு அணையை புதிதாகக் கட்டுகின்ற செலவு குறைவாக இருக்கிறது. எனவே, கூடுமானவரையில் கொள் அளவைப் பாதிக்காத அளவுக்கு நாம் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு மேலும் அங்கே உள்ள மண்ணை அப்புறப்படுத்த வேண்டும் என்றால் விவசாயிகள் அவர்களாகவே வந்து எடுத்துக் கொண்டு சென்றால் கூட போதுமானது. நாம் அதற்காக கட்டணம் வசூலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது தான் இன்றுள்ள நிலை.

(முற்பகல் 10.10)

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யும்போது சில தாதுப் பொருள்கள் கிடைத்ததாகச் சொல்கிறார்கள். அந்தத் தகவல் உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : துணைத் தலைவர் அவர்களே, அப்படி இதிலே குறிப்பு இல்லை. அது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் இருந்தால் கொடுக்கலாம். நானும் விசாரிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, அங்கே வண்டல் மண் படிந்து இருக்கிற காரணத்தால் ஏற்கனவே அந்த அணையில் எவ்வளவு தண்ணீர் கொள்ளளவு இருக்க வேண்டுமோ அது மிகவும் குறைந்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அண்மையில் அதை ஆழப்படுத்தச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? இதுவரையில் அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ? அப்படி ஏதேனும் விவரங்கள் இருந்தால், அதைப் பற்றிய விவரங்களை முழுமையாக விளக்க வேண்டுகிறேன்.

1982 மார்ச் 5]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். 19 ஆண்டு காலம் எடுத்துப் பார்த்ததில் கூட ஆண்டு ஒன்றுக்கு 1.24 சதவிகிதம் தான் அந்தக் கொள்ளளவு பாதிக்கப்படுகிற அளவிற்கு வண்டல் மண் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அது அணைத் திட்டத்தை இதுவரையில் பாதிக்கவில்லை. பாதகம் ஆகும் சூழ்நிலை வருகிறபோது, ஏற்கனவே மாண்புமிகு ஏ. சி. சண்முகம் அவர்கள் கேட்டபோது தெரிவித்தது போல், விவசாயிகள் அந்த வண்டல் மண் தேவைப்படுகிறது என்று சொன்னாலும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கலாம். அல்லது ஓரளவு கொள்ளளவை பாதிக்கும் அளவிற்கு அந்த வண்டல் மண் இருக்குமானால், அதை அரசே வெளியே எடுப்பதற்கு முயற்சிக்கலாம்.

வீராணம் ஏரி வடிகால் வாய்க்காலில் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளம்.

* வினா எண் 378.—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னார்க்காடு மாவட்டம் வீராணம் ஏரியிலிருந்து வடிகால் வாய்க்காலில் (வாலாஜா வாய்க்கால்) பருவ மழை காலங்களில் வெள்ளம் வந்து பயிர்களையும், குடிசைகளையும் சேதப்படுத்துவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளங்களால் இப்பகுதிகளில் பயிர் சேதம் ஏற்பட்டது.

(ஆ) உடனடியாக நிவாரணம் அளிக்க 1977 ஆம் ஆண்டில் ரூ. 5.26 இலட்சம் செலவிலும், 1979 ஆம் ஆண்டில் ரூபாய் 2.74 இலட்சம் செலவிலும், வெள்ளத் தடுப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இப்பகுதிகளுக்கு வெள்ளத்திலிருந்து நிரந்தரமான பாதுகாப்பு அளிப்பதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலும், 1979 ஆம் ஆண்டிலும் அந்த வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டன என்று